JD NMP

**சுருக்கம்**

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் – ஒற்றை சாளர முகமைக் கணக்கில் (SNA) இருப்பு வைக்கப்பட்டுள்ள தொகையிலிருந்து சத்துணவு மையங்களுக்கு புதிய சமையல் உபகரணங்களை கொள்முதல் செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை

அரசாணை (ப) எண்.203 — நாள் 26.08.2025
திருவள்ளுவர் ஆண்டு 2056
விசுவாவசு, ஆவணி 10

படிக்க:–

1. அரசாணை (ப) எண். 113, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை, நாள் 23.04.2025.
2. அரசாணை (2ப) எண்.15, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந 4–1) துறை, நாள் 14.05.2025.
3. அரசாணை (2ப) எண்.18, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந 4–1) துறை, நாள் 16.06.2025.
4. சமூக நல இயக்குநர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட ந.க.எண். 933182/சஉதி2(2)/2025, நாள் 14.07.2025.

------

ஆணை :–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2023–2024–ஆம் ஆண்டில் தொடரா செலவினம் தலைப்பில் ஒன்றிய அரசின் மூலம் பள்ளிகளுக்கு சமையல் உபகரணங்கள் வழங்கிட மற்றும் சிறு பழுதுகள் சரிசெய்ய செலவினமாக 60:40 என்ற பங்களிப்பில் மொத்தம் ரூ.28,66,05,000/–ஐ (மத்திய அரசு பங்கு ரூ.17,19,63,000/– மற்றும் மாநில அரசின் பங்காக ரூ.11,46,42,000/–) TN–335 ஒற்றை சாளர முகமைக் கணக்கில் (SNA) வரவு வைத்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களது அறிவிப்பிற்கிணங்க, 25,440 சத்துணவு மையங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட எரிவாயு அடுப்புகளுக்கு மாற்றாக புதிய அடுப்புகளை ரூ.9,66,13,250/– செலவினத்தில் கொள்முதல் செய்திட TN–335–ஒற்றைச் சாளர முகமை கணக்கிலிருந்து (SNA) தொடரா செலவினத்திற்கு மேலே பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் அனுமதி அளிக்கப்பட்ட நிதியிலிருந்து செலவு செய்திட சமூக நல ஆணையருக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

த.பி.பா.,

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 3527 சத்துணவு மையங்களில் சிறு பழுதுகளை மேற்கொள்ள ஏதுவாக, மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையின் வழியாக TN–335 ஒற்றை சாளர முகமைக் கணக்கில் (SNA) வரவு வைக்கப்பட்டுள்ள தொகையிலிருந்து ரூ.3,52,70,000/– செலவு செய்திட சமூக நல ஆணையருக்கு ஆணையிடப்பட்டுள்ளது.

4. மேலும், பார்வை நான்கில் காணும் கடிதத்தில், 16836 சத்துணவு மையங்களில் பயன்பெறும் பயனாளிகளின் அடிப்படையில் ரூ.15,47,21,750/– செலவினத்தில் சமையல் உபகரணங்கள் கொள்முதல் செய்து மையங்களுக்கு வழங்கிட அனுமதி அளித்தும், ஒன்றிய அரசின் மின்னணு சந்தையின் (GeM) மூலம் சமையல் உபகரணங்களை கொள்முதல் செய்திடவும், இக்கொள்முதலுக்கு தேவையான தொகை அனைத்தும் TN–335 ஒற்றை சாளர முகமைக் கணக்கில் (SNA) வரவு வைக்கப்பட்டுள்ளமையால், அத்தொகையிலிருந்து செலவினங்களை மேற்கொள்ள சமூக நல இயக்குநருக்கு உரிய அனுமதி வழங்கிடுமாறும், பாத்திரங்களின் விலைகளுக்கு அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மிகாமல் பாத்திரங்களின் எண்ணிக்கையை கூட்டவோ அல்லது குறைக்கவோ உரிய அதிகாரத்தினையும் அவருக்கு வழங்கிடவும் சமூக நல இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. சமூக நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. அதனடிப்படையில், ஒற்றை சாளர முகமைக் கணக்கில் (SNA) இருப்பு வைக்கப்பட்டுள்ள தொகையிலிருந்து சத்துணவு மையங்களுக்கு புதிய சமையல் உபகரணங்களை கொள்முதல் செய்திட கீழ்கண்டவற்றிற்கு ஆணை வழங்கலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

i. இணைப்பு–I–ல் உள்ள 16,836 சத்துணவு மையங்களில் பயன்பெறும் பயனாளிகளின் அடிப்படையில் ரூ.15,47,21,750/– செலவினத்தில் சமையல் உபகரணங்கள் கொள்முதல் செய்து சத்துணவு மையங்களுக்கு வழங்கிட அனுமதி அளிக்கப்படுகிறது.

ii. மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையின் மூலம் TN 335 ஒற்றை சாளர முகமைக் கணக்கில் (SNA) இருப்பு வைக்கப்பட்டுள்ள தொகையிலிருந்து 16,836 சத்துணவு மையங்களுக்கு ரூ.15,47,21,750/– செலவினத்தில் சமையல் பாத்திரம் மற்றும் ஏனைய உபகரணங்களை இணைப்பு–II–ல் உள்ளவாறு கொள்முதல் செய்திட அனுமதி வழங்கப்படுகிறது.

iii. இணைப்பு–II–ல் உள்ளவாறு சமையல் உபகரணங்களை ஒன்றிய அரசின் மின்னணு சந்தையின் (GeM) மூலம் கொள்முதல் செய்திட அனுமதியும் பாத்திரங்களின் விலைகளுக்கு அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மிகாமல் பாத்திரங்களின் எண்ணிக்கையை கூட்டவோ அல்லது குறைக்கவோ அனுமதியும் சமூக நல இயக்குநருக்கு வழங்கப்படுகிறது.

6. மேற்படி செலவினம் மேற்கொண்டதற்கான பயனீட்டுச் சான்றிதழ்களை உரிய நேரத்தில் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு சமூக நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் மின் அலுவலக எண்.11124745/நிதி (சந)/2025, நாள் 21.08.2025–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெயஸ்ரீ முரளீதரன்
அரசு செயலாளர்

பெறுநர்
சமூக நல இயக்குநர், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சமூக நல இயக்குநர் வழியாக)
தலைமைத் தணிக்கை இயக்குநர், சென்னை–18.
மாநிலக் கணக்காயர், சென்னை–18/35.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
நகல்
மாண்புமிகு சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, சென்னை–9.
நிதித்(சந)துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஜெ.எ. ஜெஸ்லின் ரஞ்சனி
26.08.2025
பிரிவு அலுவலர்
26/8/25

இணைப்பு–I

அரசாணை (ப) எண். 203, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை, நாள் 26.08.2025

மாவட்ட வாரியாக சமையல் உபகரணங்கள் வழங்கப்படவேண்டிய மையங்களின் எண்ணிக்கை.

| வ. எண் | மாவட்டம் | பயனாளிகளின் எண்ணிக்கை | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | 01–50 | 51 – 150 | 151–250 | 251 மேல் | |
| 01 | அரியலூர் | 132 | 45 | 71 | 44 | 292 |
| 02 | சென்னை | 45 | 60 | 70 | 74 | 249 |
| 03 | செங்கல்பட்டு | 173 | 75 | 84 | 59 | 391 |
| 04 | கோயமுத்தூர் | 202 | 80 | 153 | 74 | 509 |
| 05 | கடலூர் | 302 | 140 | 113 | 54 | 609 |
| 06 | தருமபுரி | 169 | 90 | 106 | 51 | 416 |
| 07 | திண்டுக்கல் | 340 | 127 | 92 | 59 | 618 |
| 08 | ஈரோடு | 384 | 98 | 105 | 49 | 636 |
| 09 | காஞ்சிபுரம் | 109 | 45 | 62 | 30 | 246 |
| 10 | கன்யாகுமரி | 81 | 55 | 82 | 50 | 268 |
| 11 | கரூர் | 199 | 35 | 48 | 34 | 316 |
| 12 | கிருஷ்ணகிரி | 264 | 190 | 153 | 39 | 646 |
| 13 | மதுரை | 240 | 105 | 101 | 84 | 530 |
| 14 | நாகப்பட்டிணம் | 184 | 81 | 79 | 63 | 407 |
| 15 | நாமக்கல் | 226 | 70 | 91 | 41 | 428 |
| 16 | நீலகிரி | 92 | 50 | 24 | 17 | 183 |
| 17 | பெரம்பலூர் | 45 | 40 | 40 | 30 | 155 |
| 18 | புதுக்கோட்டை | 274 | 98 | 171 | 100 | 643 |
| 19 | இராமநாதபுரம் | 321 | 75 | 53 | 48 | 497 |
| 20 | சேலம் | 369 | 75 | 200 | 140 | 784 |
| 21 | சிவகங்கை | 319 | 60 | 80 | 49 | 508 |
| 22 | தஞ்சாவூர் | 332 | 110 | 112 | 89 | 643 |
| 23 | தேனி | 142 | 55 | 74 | 34 | 305 |
| 24 | திருச்சிராப்பள்ளி | 244 | 120 | 142 | 59 | 565 |
| 25 | திருவள்ளூர் | 250 | 66 | 117 | 58 | 491 |
| 26 | திருவாரூர் | 192 | 70 | 71 | 34 | 367 |
| 27 | திருநெல்வேலி | 224 | 105 | 63 | 23 | 415 |
| 28 | திருப்பூர் | 262 | 75 | 99 | 44 | 480 |
| 29 | திருவண்ணாமலை | 346 | 128 | 183 | 85 | 742 |
| 30 | தூத்துக்குடி | 367 | 110 | 74 | 55 | 606 |
| 31 | வேலூர் | 118 | 78 | 50 | 67 | 313 |
| 32 | விழுப்புரம் | 207 | 126 | 134 | 76 | 543 |
| 33 | விருதுநகர் | 305 | 130 | 124 | 56 | 615 |
| 34 | கள்ளக்குறிச்சி | 127 | 70 | 126 | 55 | 378 |
| 35 | தென்காசி | 146 | 105 | 100 | 31 | 382 |
| 36 | இராணிப்பேட்டை | 117 | 76 | 49 | 65 | 307 |
| 37 | திருப்பத்தூர் | 117 | 76 | 49 | 65 | 307 |
| 38 | மயிலாடுதுறை | 18 | 9 | 10 | 9 | 46 |
| | மொத்தம் | 7984 | 3203 | 3555 | 2094 | 16836 |

## இணைப்பு–II

அரசாணை (ப) எண். 203, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை, நாள் 26.08.2025

பயனாளிகள் வாரியாக வழங்கப்படவேண்டிய சமையல் உபகரணங்கள் பற்றிய விவரங்கள்.

| வ.எண் | பாத்திரங்களின் விவரம் | பயனாளிகளின் எண்ணிக்கை | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | 01–50 | 51 – 150 | 151–250 | 251 மேல் | |
| 1 | அரிசி வேக வைக்க வட்டா | | | | | |
| 1.1 | 10 கிகி அரிசி வேக வைக்க | -- | -- | 3555 | 2094 | 5649 |
| 1.2 | 8 கிகி அரிசி வேக வைக்க | 7984 | 3203 | -- | -- | 11187 |
| 2 | எவர்சில்வர் தூக்கு மூடியுடன் | | | | | |
| 2.1 | 4 லிட்டர் | 7984 | -- | -- | -- | 7984 |
| 2.2 | 5 லிட்டர் | -- | 3203 | -- | -- | 3203 |
| 2.3 | 7 லிட்டர் | -- | -- | 3555 | 2094 | 5649 |
| 3 | குக்கர் | | | | | |
| 3.1 | 5 லிட்டர் | 7984 | -- | -- | -- | 7984 |
| 3.2 | 10 லிட்டர் | -- | 3203 | -- | -- | 3203 |
| 3.3 | 12 லிட்டர் | -- | -- | 3555 | 2094 | 5649 |
| 3.4 | 20 லிட்டர் | -- | -- | -- | 2094 | 2094 |
| 4 | சில்வர் அன்னக்கூடை | 7984 | 3203 | 3555 | 2094 | 16836 |
| 5 | சில்வர் பேசின் முட்டை வைக்க | 7984 | 3203 | 3555 | 2094 | 16836 |
| 6 | முட்டை வேக வைக்க பாத்திரம் | 7984 | 3203 | 3555 | 2094 | 16836 |
| 7 | கரண்டி | | | | | |
| 7.1 | அன்னக் கரண்டி பரிமாற | 7984 | 3203 | 3555 | 2094 | 16836 |
| 7.2 | சாதம் கிளற பெரியது | 7984 | 3203 | 3555 | 2094 | 16836 |
| 7.3 | சாம்பார் கரண்டி | 7984 | 3203 | 3555 | 2094 | 16836 |
| 7.4 | முட்டை பரிமாறும் கரண்டி | 7984 | 3203 | 3555 | 2094 | 16836 |
| 8 | அரிவாள் மனை | 7984 | 3203 | 3555 | 2094 | 16836 |
| 9 | காய் வெட்டும் பலகை | 7984 | 3203 | 3555 | 2094 | 16836 |
| 10 | எவர்சில்வர் டிரம் | | | | | |
| 10.1 | 15 கிலோ | -- | 3203 | 3555 | -- | 6758 |
| 10.2 | 20 கிலோ | -- | -- | -- | 2094 | 2094 |
| 11 | அளவுக் கிண்ணம் | 7984 | 3203 | 3555 | 2094 | 16836 |
| 12 | எண்ணெய் அளவு கோப்பை | 7984 | 3203 | 3555 | 2094 | 16836 |
| 13 | அலுமினிய வாளி | 7984 | 3203 | 3555 | 2094 | 16836 |

ஜெயஸ்ரீ முரளீதரன்
அரசு செயலாளர்

//உண்மை நகல்//

26.08.2025

பிரிவு அலுவலர்.